Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தொண்டை மண்டலத்து சிற்பங்களும், ஓவியங்களும்

49

**முனைவர்.ப.எழில்முருகன்.**
**பேராசிரியர் / துறைத்தலைவர்**
**காட்சி வழி தகவல் தொடர்பியல் துறை,**
**அன்னை வயலெட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை - 53.**

**ஆய்வு சுருக்கம்**

முற்கால மனிதன் தனது அறிவு வளர்ச்சியின் படிநிலை உயரத் தொடங்கியதன் வழியாக அவனது நாகரீக வாழ்வும் வளர்ச்சியான மாற்றம் பெற்றது. அவ்வாறான வளர்ச்சிப் படிநிலைகள் கலைகளின் வழியாகவே வெளிப்பட்டுள்ளன. மனிதனின் கலை வளர்ச்சியே அறிவு வளர்ச்சியாக அமைந்தன. கலைகளும் அவனது வாழ்வியலுடன் கலந்த ஒன்றாக இருந்தன. அவ்வாறான கலைகள் பொழுதுபோக்காகவும், அடிப்படை கூறாகவும், வரலாற்று பதிவாகவும் விளங்கியது. இவ்வாறான கலைகள் பல்வேறு பரிமாணங்களுடன் அன்று முதல் இன்றுவரை பல்வேறு மாற்றங்களுக்கிடையே மனித வாழ்வில் நிகழ்த்து கலையாகவும், கவின் கலையாகவும் நம்மை மகிழ்வித்து வருகின்றது. இவற்றில் சிற்பக்கலையும், ஓவியக்கலையும் மனித வாழ்வியலின் முதன்மை கலையாக விளங்கியதை பல்வேறு வரலாற்று தரவுகள் வழியாக அறிந்திட முடியும். தமிழ் நாட்டின் வடக்குப் பகுதியான தொண்டை மண்டலத்தில் பல்வேறு கலை நிகழ்வுகள் நடத்தப் பெற்றதை வரலாற்று நூல்களும், தற்காலத்தில் நமக்கு கிடைக்கின்ற சான்றுகளும் உறுதி செய்கின்றன. இவற்றில் தொண்டைமண்டலத்தின் சிற்பங்களும், ஓவியங்களும் குறிப்பிட்ட பங்கு வகிக்கின்றன. இவைகுறித்த மேலும் பல தரவுகளை விவரிக்கும் நோக்கில் இந்த ஆய்வுக்கட்டுரையானது அமைந்துள்ளது.

**சிறப்பு சொற்கள் :** அறிவு, கலை, நிகழ்த்து, கவின், சிற்பம், ஓவியம்

**முன்னுரை:**

முற்கால மனிதன் தனது அறிவு வளர்ச்சியின் படிநிலை உயரத் தொடங்கியதன் வழியாக அவனது நாகரீக வாழ்வும் வளர்ச்சியான மாற்றம் பெற்றது. அவ்வாறான வளர்ச்சிப் படிநிலைகள் கலைகளின் வழியாகவே வெளிப்பட்டுள்ளன. மனிதனின் கலை வளர்ச்சியே அறிவு வளர்ச்சியாக அமைந்தன. கலைகளும் அவனது வாழ்வியலுடன் கலந்த ஒன்றாக இருந்தன. அவ்வாறான கலைகள் பொழுதுபோக்காகவும், அடிப்படை கூறாகவும், வரலாற்று பதிவாகவும் விளங்கியது. இவ்வாறான கலைகள் பல்வேறு பரிமாணங்களுடன் அன்று முதல் இன்றுவரை பல்வேறு மாற்றங்களுக்கிடையே மனித வாழ்வில் நிகழ்த்து கலையாகவும், கவின் கலையாகவும் நம்மை மகிழ்வித்து வருகின்றது. இவற்றில் சிற்பக்கலையும், ஓவியக்கலையும் மனித வாழ்வியலின் முதன்மை கலையாக விளங்கியதை பல்வேறு வரலாற்று தரவுகள் வழியாக அறிந்திட முடியும். தமிழ் நாட்டின் வடக்குப் பகுதியான தொண்டை மண்டலத்தில் பல்வேறு கலை நிகழ்வுகள் நடத்தப் பெற்றதை

வரலாற்று நூல்களும், தற்காலத்தில் நமக்கு கிடைக்கின்ற சான்றுகளும் உறுதி செய்கின்றன. இவற்றில் தொண்டைமண்டலத்தின் சிற்பங்களும், ஓவியங்களும் குறிப்பிட்ட பங்கு வகிக்கின்றன. இவைகுறித்த மேலும் பல தரவுகளை விவரிக்கும் நோக்கில் இந்த ஆய்வுக்கட்டுரையானது அமைந்துள்ளது.

**கலையும் வகையும்:**

மனிதன் மிகப் பழைய பெருங்கற்கால காலத்தில் காட்டுமிராண்டி வாழ்க்கையை வாழ்ந்தான். இருக்க வீடும் உடுக்க உடையும் உண்ண உணவும் உருவாக்கிக் கொள்ளத்தெரியாமல் அக்காலத்திலே மனிதன், விலங்குபோல அலைந்து திரிந்தான். பிறகு அவன் மெல்ல மெல்ல, சிறிது சிறிதாக, நாகரீக மாற்றம் அடைந்தான். வசிக்க வீடும், உடுக்க உடையும், உண்ண உணவும் உருவாக்கிக் கொள்ள தெரிந்துகொண்டான். இதனால் அவன் மிருகம் போன்ற வாழ்வில் இருந்து விலகி நாகரிக வாழ்க்கை பெற்றான். ஆனால், மனிதன் நாகரிக வாழ்க்கையை அடைவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்தன.[1] மனிதன் நாகரீகம் பெறுவதற்குப் பேருதவியாக இருந்தவை அவனது வாழ்க்கை குறித்த தேடல்களும், கற்றுக்கொண்ட பலவகையான தொழில்களுமே ஆகும். ஒவ்வொரு தொழிலையும் கற்றுத் தேர்வதற்கு அவனுக்குப் பல நூற்றுண்டுகள் கடந்தன.

**"ஆயகலைகள் அறுபத்துநான்கனையும் ஏயஉணர்விக்கும் என்அம்மை"** என்று **"சரஸ்வதி அந்தாதி"** நூலில் கவிச்சக்கரவர்த்தி கம்பர் குறிப்பிட்டுள்ளார். சிதம்பரம் திருக்கோயிலில் சோழ அரசர்களால், தங்க ஓடுகளால் வேய பெற்ற பொற்சபை உள்ளது. இந்த பொன்னம்பலத்தில் உள்ள ஒன்பது தங்க கலசங்கள் ஒன்பது சக்திகளை குறிக்கிறது. இதில் உள்ள அறுபத்திநான்கு மரத்துண்டுகள் அறுபத்திநான்கு ஆயக்கலைகளை குறிக்கும்.[2] இந்த குறிப்புகளின் படி பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்கள் பல்வேறு கலைகளில் தேர்ச்சி பெற்றிருந்ததை அறிய முடிகின்றது. அழகுக் கலைகளை நாம் கண்ணால் கண்டும், காதினால் கேட்டும், உள்ளத்தினுல் உணர்ந்தும் மகிழ்கிறோம். கலை என்னும் சொல் "கல்" என்கின்ற அடிப்படை சொல்லில் இருந்து வந்ததாகும் **"கெல்லுதல்"** என்றால் **"தோண்டுதல்"** என்று பொருள்படும். இதனை **"மலையை கெல்லி எலியைப் பிடித்தாற்போல"** பழமொழியால் அறியலாம். மலைக்குள் உள்ள தங்கம், வைரம் போன்றவற்றை கெல்லி (தோண்டி) எடுத்து வெளிக்கொண்டு வருவர். அதைப்போன்று மனதில் இருக்கும் சிற்பம், ஓவியம் போன்ற கலைகளை வெளிக்கொணர்வது கலை எனப்படும்.[3] இனி இவற்றில் நமது ஆய்விற்கான பகுதியான சிற்ப, ஓவிய கலைகள் பற்றி காண்போம். கட்டட கலையும் சிற்பம் போன்ற முப்பரிமாண வடிவ அமைப்பை கொண்டதே. சிற்பச் கலை மனிதர், விலங்கு, பறவை, தாவரம் முதலான உலகத்திலுள்ள இயற்கைப் பொருள்களின் வடிவத்தையும், கற்பனையாகக் கற்பித்து அமைக்கப்பட்ட பொருள்களின் உருவத்தையும், அழகுபட அமைப்பது. இந்தச் சிற்பக் கலை, கட்டடக் கலையைவிட நுட்பமானது. இதனையும் கண்ணால் கண்டு நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். ஓவியக் கலை சிற்பக் கலையைவிட நுட்பமானது. உலகத்தில் காணப்படுகிற எல்லாப் பொருள்களின் உருவத்தையும் உலகில் காணப்படாத கற்பனைப் பொருள்களின் வடிவத்தையும் பலவித நிறங்களை கொண்டு அழகுபட எழுதப்படுகிற படங்களே ஓவியக் கலையாம், இதனையும் அருகில் இருந்து கண்ணால் கண்டு மகிழ்கிறோம்.

**தொண்டை மண்டலத்து கலைகள்:**

வேலூர் மாவட்டம் "பாலு செட்டிச் சத்திரம்" அருகில் உள்ள "திருப்புட்குழி"என்னும் ஊர் உள்ளது. இந்த ஊரை தமர்" நாட்டு, தமர் கோட்டத்து **"சித்திரமேழி"**[4] என்று கல்வெட்டுகள் குறிக்கின்றன. இதன் வழியாக சித்திரம் (ஓவியம்) குறித்த அறிதலும், புரிதலும் இந்த பகுதி மக்களுக்கு இருந்ததை அறிந்திட முடிகின்றது. திருத்தாமரைப்பாக்கம் கல்வெட்டு **"கூத்தாடும் தேவரான பிரிதிகங்கருடன் பள்ளி கொண்ட பாடும் பெண்ணும்"**[5] என்று குறிக்கிறது. இதன் வழியாக ஆடல், பாடல் கலைகளை தொண்டை மண்டல மக்கள் கற்று தேர்ந்திருந்ததை அறிந்திட முடிகின்றது. தமிழகத்தின் தொண்டைமண்டல பகுதியான வடாற்காடு, தென்னாற்காடு, கிருட்டிணகிரி, தருமபுரி,காஞ்சிபுரம் பகுதிகளில் வழங்கும் கூத்து, இரண்டாயிரம் ஆண்டுக்காலத் தமிழ்க்கூத்தின் வளர்ச்சி வடிவமே ஆகும். இன்றைக்குக் காணக்கிடைக்கும் கூத்தோடு, கேரளத்தின் கதகளியும் கர்நாடகத்தின் யட்சகானமும் பல்வேறு ஒற்றுமைகளைப் பெற்றிருக்கின்றன.[6] இவை "திராவிடம்" என்னும் ஒருங்கமைப்பின் ஒத்திசைவாகவும் இருக்கலாம். தமிழகக் கலைகளில் மராட்டிய, பார்சி நிகழ்த்துக்கலை மரபின் தாக்கமும் இருப்பதைக் காணமுடிகிறது. தொண்டை மண்டலத்து புலவர்கள் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, புறநானூறு எனும் எட்டுத்தொகை நூல்களில் பல பாடல்களையும் பத்துப்பாட்டு நூல்களில் சில பாடல்களையும் பாடைத்துள்ளனர்.[7] இதன் வழியாக இலக்கிய கலைகளிலும் தேர்ந்தவர்களாக தொண்டைமண்டலத்து மக்கள் இருந்ததை அறிந்திட முடிகின்றது. பல்லவர், சோழர், விஜயநகரர் கால கோவில்கள் தொண்டைமண்டல கட்டடக்கலையையும், பல்லவர் காலத்து குடைவரை கோவில்கள் மற்றும் சிற்பங்கள் சிற்ப கலையையும், பல்லவர் காலத்து ஓவியங்கள் ஓவியக்கலைக்கும் சான்று பயக்குகின்றது. அவர்களது நுட்பமான பண்பாட்டு முறை, போர் தந்திரங்கள் மற்றும் சமைய வழிபாட்டு முறைகள் தொண்டை மண்டலத்து மக்கள் அனைத்து கலைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தமையை நமக்கு காட்டுகின்றது.

**சிற்பக்கலை:**

மண்டகப்பட்டு என்ற ஓர் இடம் செஞ்சிக்கு அருகில் உள்ளது. அங்கு ஒரு குன்றைக் குடைந்து குடைவரைக் கோயிலை மகேந்திரவர்மன் தோற்றுவித்திருக்கிறான். அதில், ஒரு விசித்திரமான கல்வெட்டைப் பொறித்துள்ளான். அதில் 'இந்தக் கோயிலை நான்முகன், திருமால், சிவபெருமான் ஆகிய முப்பெரும் தெய்வங்களுக்கும் கல் இன்றி, மண் இன்றி, உலோகம் இன்றி, சுதை இன்றி, மரம் இன்றி விசித்திர சித்தனாகிய நான் தோற்றுவித்தேன்' என்கிறான் மகேந்திரன்.

**"ஏதத் அநிஷ்டகம் அத்ருமம்**

**அலோகம், அசுதம், விசித்திர சித்தேந**

**நிர்மாபிதம் நிருபேண ப்ரும்மேஸ்வர விஷ்ணு**

**லக்ஷிதாயதனம்"**[8]

என்பது அந்தக் கல்வெட்டு. இதில் சுதை இன்றி மண் இன்றி, உலோகம் இன்றி, மரம்இன்றித் தோற்றுவித்தேன் என்றிருப்பதாலும் விசித்ரசித்தன் என்ற பெயர் உள்ளதாலும் இவனுக்கு முன்னர் இருந்த கோயில்களெல்லாம் மண்ணாலும், மரத்தாலும் சுதையாலும் கட்டப்பட்டன. இவனுக்கு

முன்னர் கல்லைப் பயன்படுத்த அறிந்திருக்கவில்லை. இவனே முதலில் தமிழகத்தில் குடைவரைக் கோயிலைத் தோற்றுவித்தவன் என்று வரலாற்று ஆசிரியர்கள் இதுவரை கூறினர். ஆனால் இக்கருத்து இப்பொழுது பல காரணங்களால் மாற்றம் பெற்றுள்ளது. ஒன்று, மகேந்திரனுக்கு முன் ஆண்ட சிம்மவிஷ்ணு; அவன் தந்தை சிம்மவர்மன் ஆகிய மன்னர் காலத்தில் செதுக்கப்பட்ட கற்சிலைகள் இப்பொழுது கிடைத்துள்ளன. இவற்றில் அம்மன்னர்களது பெயரும் எழுதப்பட்டிருக்கிறது. அதனால் மகேந்திரனுக்கும் முன்னரே கல்லைச் செதுக்கி சிலை அமைக்கும் கலைத்திறன் தமிழ் மக்களுக்குத் தெரிந்திருந்தது என்பதில் ஐயமில்லை. பல்லவ மன்னர்கள் இந்து மதத்தினையும், சமண மதத்தையும் காழ்ப்பின்றிப் போற்றி வளர்த்ததால் அவர்களது தலைநகரான காஞ்சிப் பகுதி பலவகைக் கலைகள் உருப்பெறுவதற்குக் காரணமாக, அமைந்தது. மேலும் கடிகை போன்றவைகள் இருந்ததால் 'காஞ்சி சிறந்த கல்விக் கூடமாகவும், கலாச்சாரம், பண்பாட்டை ஊக்குவிக்கும் இடமாகவும் விளங்கியதால் பல்வேறு துறைகளில் திறன்மிக்கோர் இங்குக் கூடினர்.[9] இதன் விளைவாக இங்குப் பலவிதக் கலைகளும் தோன்றிச் செழிப்புடன் வளர்ந்தன.

மாமல்லபுரத்தில் காணப்படும் மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட குகைக்கோயில் என்னும் குடைவரைக்கோயில், ஒரே பாறையில் செதுக்கப்பட்ட சிற்பங்கள், கட்டுமானக் கோயில்கள், படைப்புச் சிற்பங்கள் என நான்கு வகையான சிற்பங்களும் மாமல்லபுரத்தில் இருப்பது தனிச்சிறப்பு. பல்லவ மன்னர்கள் காலத்தில் உருவாக்கப்பட்ட இச்சிற்பங்களில் எலிகள் விளையாடுதல், தவம் செய்யும் பூனை, பேன் பார்க்கும் குரங்கின் குடும்பம், யானைக்கூட்டம், இயற்கைக் காட்சிகள் என ஒவ்வொரு சிற்பமும் மனிதர்களின் சிந்தனைகளைத் தூண்டும் அற்புதம் நிறைந்தது. ஒரு ஆண் மான் தனது பின் காலால் அதன் மூக்கைத் தொடுவதும், அதை வெட்கத்துடன் கவனிக்கும் பெண் மானும் தத்ரூபமாக செதுக்கப்பட்டுள்ளது.[10] அர்ஜுனன் தபசு என்ற சிற்பத் தொகுப்பு மேற்கண்ட காட்சிகளை தன்னுள் கொண்டு செதுக்கப்பட்டுள்ளது. மாமல்லபுரத்தின் பல்லவ சிற்பங்களுக்கான சிறப்பு இந்த சிற்பங்கள். காஞ்சி கைலாசநாதர் கோயில் இராஜசிம்மன் என்கின்ற பல்லவ மன்னனால் கி.பி.8-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. சிற்பக் கருவூலமாய் விளங்கும் இக்கோயில் சிவபெருமானுக்காக கட்டப்பட்டது. திருச்சுற்று மாளிகை முழுவதும் சுற்றிலும் நான்கு திசைகளிலும் 58 சிற்றாலயங்கள் காணப்படுகின்றன. இச்சிற்றாலயங்களின் உள்ளே சோமாஸ்கந்தர் சிற்பம் இடம் பெற்றுள்ளது. இது இராஜசிம்மனின் முன்னோர்களைக் குறிப்பதாக சொல்லப்படுகிறது. நடுவில் கைலாயம் போன்று இறைவனுக்கு எடுப்பிக்கப்பட்ட கருவறை அமைந்திருக்க சுற்றிலும் அமைந்த 56 தேசங்களாய் இந்த சிற்றாலயங்கள் விளங்குகின்றன. சிற்றாலயத்தின் முகப்பில் அமைந்த நாற்கரக் கோட்டத்தில் சிவவடிவங்களும், விஷ்ணு வடிவங்களும் இடம் பெற்றுள்ளன. இரு சிற்றாலயங்களுக்கு இடைப்பட்ட வெளியில் தாய்த் தெய்வ உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பு சிறப்பு வாய்ந்தது. கருவறை விமானத்தின் தேவக்கோட்டங்களில் மிகப்பெரிய அளவில் சிவவடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தெற்கில் தென்முகக் கடவுள், மேற்கில் கங்காளர், வடக்கில் கங்காதரர் ஆகிய சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. கங்காதரர், ஆடல்வல்லான் சிற்பங்கள் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன[11] இவை அனைத்தும் பல்லவ காலத்திய தொண்டைமண்டல சிற்பக்கலை சிறப்பை

நமக்கு காட்சியளிக்கின்றது.

தொண்டைமண்டலத்து சிறப்பைக்கலை அமைப்பு மேலும் பல சான்றுகள் வழியாக தெரிகின்றது. கூத்தாடுபவர்களின் சிற்பங்கள் காஞ்சி தான்தோன்றீஸ்வரர் கோயிலில் காணக் கிடக்கின்றது. பல்லவர் சிற்பங்கள் பட்டையான முப்புரிநூல், பரந்த மார்பு ஆகியவற்றுடன் எளிமையாக. விளங்குகின்றன. சோழர் காலச் சிற்பங்களும், செப்புத் திருமேனிகளும் இப்பகுதியில் காணப்படுகின்றன. மேலும் மைலாப்பூர் கோலவிழியம்மன் கோயிலில் காணப்படும் காளியின் செப்புத் திருமேனியும் திருவொற்றியூர்: தட்சிணாமூர்த்தி செப்புத் திருமேனியும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும் .[12] விஜயநகர நாயக்கர் சிற்பங்கள் பல்வேறு கோயில்களின் மண்டபத் தூண்களில் காணக் கிடக்கின்றன.

**ஓவியக்கலை**

தென்னார்க்காடு மாவட்டத்தில் கீழ்வாலை என்னும் சிற்றூர் உள்ளது. இவ்வூரின் அருகே ஓவியம் தீட்டப் பெற்ற குன்று அமைந்துள்ளது. இந்த குகையில் செந்நிற ஓவியங்கள் பல வரையப்பட்டுள்ள காரணத்தாலும், இங்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர் குறிப்பிட்ட ஆயர்குலக் குழுவினர் இறைவனுக்குப் பலி கொடுத்து வணங்கிச் சென்றமையாலும், இக்குன்று “இரத்தக் குடைக்கல்” என்று வழங்கப்படுகின்றது.[13] இங்குள்ள மூன்று பாறைகளில் நான்கு இடங்களில் பல வண்ண ஓவியங்கள் அழகாய்க் காட்சியளிக்கின்றன. மிகுதியான ஓவியங்களைக் கொண்ட பாறை, “இரத்தக் குடைக்கல்” ஆகும். கீழ்வாலைப் பாறை ஓவியத்தில் குதிரையின் வடிவம் ஒன்று இடம்பெறுகின்றது. குதிரையின் மீது ஒருவர் அமர்ந்துள்ளவாறும், குதிரைக்கு முன் மனித உருவம் ஒன்றும், அம்மனிதன் அக்குதிரையினை அழைத்துச் செல்வது போன்றும் அந்த ஓவியம் காட்சியளிக்கின்றது. கீழ்வாலையில் சிந்து சமவெளி நாகரீக காலத்து குறியீட்டு வடிவங்களும் கிடைத்துள்ளது. மேலும் தென்னார்க்காடு மாவட்டத்தில் கீழ்வாலைக்கருகில் கண்டுபிடிக்கப்பெற்ற மற்றொரு சிறப்புடைய இடம் செத்தவரை ஆகும். செத்தவரைக்கு அருகே அய்யனார் மலையில் பாறை ஓவியங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள ஓவியங்கள் பழமையானவை என்பதை அவற்றின் வடிவம், வண்ணப்பூச்சு ஆகியவற்றைக் கொண்டு கணிக்க முடிகின்றது.[14]இதன் வழியாக தொல்பழங்காலத்திலேயே தொண்டை மண்டலம் ஓவியம் எழுதும் மக்களை கொண்டிருந்தது தெரிகின்றது.

வரலாற்றுக்கு காலத்திலும் தொண்டை மண்டலப்பகுதி ஓவியக்கலையில் சிறந்து விளங்கி உள்ளது. காஞ்சி கைலாச நாதர் கோயில் ஓவியங்கள் சிறப்புடையவை. பனமலையில் உள்ள பார்வதியின் ஓவியம் மிகவும் எழில் வாய்ந்தது. பல்லவர் கால ஓவியங்கள் அஜந்தாவில் உள்ள ஓவியங்களையும் இலங்கையில் உள்ள சிகிரியா :ஓவியங்களையும் விஞ்சுகின்ற வகையில் அமைந்துள்ளன.[15] விஜயநகர நாயக்கர் கால ஓவியங்களுக்கு எடுத்துக்காட்டாக வரதராஜப் பெருமாள் கோயில் ஓவியங்கள் விளங்கு கின்றன.

தென்னிந்தியாவின் முற்கால அரச பரம்பரையினருள் ஒருவர் காஞ்சிப் பல்லவர். பல்லவ அரசின் முதலாம் மகேந்திரவர்மன். விசித்திரசித்தன், சித்திரகாரப்புலி, மத்தவிலாசன், சைத்யகாரி போன்ற விருதுகளை கொண்டிருந்தான். அவனது விருதுகள் அவன் கலை உணார்வைச் சுட்டிக்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

காட்டுகின்றன.[16] இந்த அரசனின் நினைவுச் சின்னங்களில் உள்ள ஓவியங்கள் அதிகம் இல்லாவிடினும் , பல்லவர் கால ஓவியக் கலையின் சிறந்த சான்றுகளை அளிக்கின்றன. மாமண்டூர் போன்ற குகைக்கோயில்களில் உள்ள வரிவண்ணச் சின்னங்கள் மகேந்திரவர்மன் காலத்திய உயர்ந்த ஓவியக் கலைப் பகுதி என்பதைத் தெரிவிக்கிறது. மகேந்திரவர்மன் காலத்துக்குப் பிறகு ஒவிய வளர்ச்சி எவ்வாறிருந்தது என்பதைப் புலப்படுத்தும் ஓவியச் சின்னங்கள், பனைமலை, காஞ்சிபுரத்தில் உள்ள பல்லவ கட்டடக் கோயில்களில் இருக்கின்றன. இவை பேராசிரியர் துப்ராயால் கண்டுபிடிக்கப் பட்டன.

பனைமலையில் தலையிலே கிரீடமும் தலைக்கு மேலே கவிகையும் கொண்ட வனப்புமிக்க தேவி முறையே மஞ்சள்,காவி,நீளம்,பச்சை, சிவப்பு,வெள்ளை,கருப்பு வண்ணங்களை கொண்டு மெல்லிய கோடுகளால் வரையப்பட்டுள்ளதை நமது கள ஆய்வின் வழியாக அறிந்திட முடிகின்றது. வியக்க வைக்கும் இந்த படைப்பு தொண்டைமண்டல ஓவியக்கலை சிறப்புக்கு ஒரு மகுடம். காஞ்சி கைலாசநாதர் கோயில் பிராகாரத்தைச் சுற்றியுள்ள இரு சிறு அறைகளில் காணப்படும் ஒரு அரச உருவமும், ஒரு சோமாஸ் கந்தர் உருவமும் இவர்களின் அழகிய ஒவியச் சிதைவுகள் ராஜசிம்மன் காலத்து ஒவியனின் கலையைக் காட்டுகின்றன.[17] சோமாஸ்கந்த ஓவியத்தில், சிவன் பாதத்தடியில் ஒருபுறம் சிவகணம், பார்வதியின் இருக்கைக்குப் பக்கம் உள்ள அவள் அழகிய தாதி, இவ்வுருவங்கள் நுணுக்கமாக இருந்தும், இவற்றை வரையறுக்கும் வரிகளின் வியப்புமிக்க வீச்சைக்காட்ட இந்த கோடுகள் போதுமானதாக உள்ளது. பல்லவர் கலையில் சோமாஸ்கந்த உருவம் தனித்தன்மையானது. இந்தக் காலத்து ஒவியத்தில் பாதுகாக்கப்பட்டிருக்கும் அதன் உருவம், இது ஒன்றுதான் எஞ்சியுள்ளது என்பதையும் நாம் நினைவுகொள்ளும்போது பல்லவர் கால கலையின் ஆராய்ச்சிக்கு இது எவ்வளவு முக்கியமானது என்பதைச் சரியாக மதிப்பிட முடியும்.

**முடிவுரை:**

மனிதன் தனது பழங்கால அறியாமை நிலையில் இருந்து அவன் மேற்கொண்ட கலைகளின் வளர்ச்சியினால் படிப்படியாக அறிவு முதிர்ச்சி பெற்றான். அவனது வாழ்வில் பல்வேறு கலைகளும் ஒன்றுடன், ஒன்றென கலந்து இருந்துவந்தது. இவற்றில் முக்கியமான கலையான சிற்பக்கலையும், ஓவியக்கலையும் தமிழகத்தின் வடக்குப் பகுதியான தொண்டைமண்டலத்தில் வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தும், பின்பிருந்தும் வளர்ந்து வந்துள்ளதை இந்த கட்டுரையின் வழியாக அறிகின்றோம். தமிழர்கள் பன்நெடும்காலமாய் போற்றிவளர்த்த இத்தகைய கலைகளை நாம் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல் நமது அடுத்த தலைமுறைக்கும் கொண்டுசேர்க்க உறுதிகொள்வோம்.

**அடிக்குறிப்பு:**

**1.மயிலை.சீனி.வேங்கடசாமி,தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்,பாரி நிலையம்,சென்னை-7,மார்ச்-1960.பக்.02.**

**2.நடராஜன்சடையப்பன். அருள்மிகு நடராஜர்திருக்கோயில். சிதம்பரம். இணைய.கட்டுரை, https://holytemples.in/natarajar-chidambaram.**

**3.முனைவர் எஃப்.பாக்கியமேரி.காலம்தோறும் தமிழர் கலைகள்.பாவேந்தன் பதிப்பகம்.சென்னை-**

4.பக்.07

4.கு.தாமோதரன், வரலாறும் கலையும் - தமிழ்நாடு அரசு, தொல்பொருள் ஆய்வுத்துறை, தரமணி, சென்னை- 1999. பக்.02.

5.கு.தாமோதரன்,மேலது.பக்.04.

6.முனைவர் கி.பார்த்திபராஜா,தெருக்கூத்து: தொண்டை மண்டலக் கலைவடிவம். https://maatrunatakam.blogspot.com/2012/12/blog-post_7622.html.

7.முனைவர் சு.அ.அன்டையப்பன், தொண்டைமண்டலப் புலவர்கள். ஐஒர் சர்வதேச வெளியீட்டாளர். கோயம்பத்தூர்.2019.பக்.01.

8.முனைவை இரா.நாகசாமி.ஓவியப்பாவை.தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.சென்னை.2010.பக்.01.

9.கு.தாமோதரன், வரலாறும் கலையும் காஞ்சியும் 'கலைகளும்.பக்.04.

10.தினமணி செய்தித்தாள்.மாமல்லபுரத்தின் சிறப்புகள்.29 நவம்பர் – 2019

11.http://www.tamilvu.org/ta/அருள்மிகு காஞ்சி கைலாசநாதர் திருக்கோயில்.

12.கு.தாமோதரன்,மேலது.பக்.46.

13.முனைவர் இராசு.பவுன்துரை.தமிழகப் பாறை ஓவியங்கள்.மெய்யப்பன் தமிழாய்வகம்,2001.பக்.45.

14.முனைவர் இராசு.பவுன்துரை.மேலது.பக்.60.

15.கு.தாமோதரன்,மேலது.பக்.46.

16.சி.சிவராமமூர்த்தி.இந்திய ஓவியம். நேஷனல் புக் ட்ரெஸ்ட் இந்தியா.2010.பக்.63.

17.சி.சிவராமமூர்த்தி.மேலது.பக்.65.

துணைநூல் பட்டியல்:

1.மயிலை.சீனி.வேங்கடசாமி,தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்,பாரி நிலையம்,சென்னை-7,மு.பதிப்பு - 1960.

2.முனைவர் எஃப்.பாக்கியமேரி.காலம்தோறும் தமிழர் கலைகள்.பாவேந்தன் பதிப்பகம்.சென்னை-4.மு.பதிப்பு - 2005.

3.கு.தாமோதரன், வரலாறும் கலையும் - தமிழ்நாடு அரசு, தொல்பொருள் ஆய்வுத்துறை, தரமணி, சென்னை-113. மு.பதிப்பு -1999.

4.முனைவர் சு.அ.அன்டையப்பன், தொண்டைமண்டலப் புலவர்கள். ஐஒர் சர்வதேச வெளியீட்டாளர். கோயம்பத்தூர்.20.மு.பதிப்பு - 2019.

5.முனைவர் இரா.நாகசாமி.ஓவியப்பாவை. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.சென்னை.14.மு.பதிப்பு -1979.

6.முனைவர் இராசு.பவுன்துரை.தமிழகப் பாறை ஓவியங்கள்.மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.01. மு.பதிப்பு -2001.

7.சி.சிவராமமூர்த்தி.இந்திய ஓவியம். நேஷனல் புக் ட்ரெஸ்ட் இந்தியா.புதுதில்லி.70.மு.பதிப்பு – 1974.